நகராட்சி அலுவலகம்,
சாத்தூர்.
நாள்: 20.07.2021

**சாத்தூர் நகர்மன்ற சாதாரணக் கூட்டம்**

**நிகழும் மங்களகரமான ஆண்டு பிலவ வருடம் ஆடி 04 ஆம் நாள் 2021ம் ஆண்டு ஜூலை மாதம் 20 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரணக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் விவரம் பின்வருமாறு.**

**முன்னிலை : திரு.என்.ராஜமாணிக்கம், எம்.ஏ.,**
**தனி அலுவலர்,**
**சாத்தூர் நகராட்சி.**

பொருள் எண்: 1

சாத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாதாளச் சாக்கடை திட்டப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடைபெற்று வருகிறது. உதவி செயற்பொறியாளர், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பாதாளச் சாக்கடைத் திட்ட கோட்டம், இராஜபாளையம் அவர்கள் கடித எண்.26421/F.Sattur UGSS/AEE/2021/Dt.26.04.2021–ல் நகராட்சிக்குட்பட்ட விடுபட்டு தெருக்கள் மற்றும் நெடுஞ்சாலைத்துறை அறிவுறுத்தலின்படி சாலையின் மையப்பகுதியில் கழிவுநீர் குழாய் அமைப்பதற்கு பதிலாக சாலை ஓரங்களில் சாத்தியமுள்ள இடங்களிலும் மற்றும் நகர்ப்பகுதிகளில் விடுப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள இடங்களில் கழிவுநீர் குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் அமைக்க வேண்டியது இருப்பதால் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டி வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**கூடுதலாக மேன்ஹோல்கள் மற்றும் கழிவுநீர் குழாய் அமைப்பதற்கான விபர அட்டவணை**

| வ.எண் | பகுதிகள் | ஆள் இறங்கும் குழிகள் | கழிவுநீர் குழாய்கள் (மீ) |
|---|---|---|---|
| | பகுதி–1 | | |
| 1 | அண்ணாநகர் | 5 | – |
| 2 | புறவழிச்சாலை | 1 | – |
| 3 | பஞ்சாயத்து யூனியன் அலுவலக குறுக்கு தெரு | 5 | – |
| 4 | படந்தால் ரோடு | 11 | 260 |
| 5 | பெரியார் நகர் வாட்டர் டேங்க் ரோடு | 1 | – |
| 6 | ஆண்டாள்புரம் | 2 | – |
| 7 | மேலக்காந்திநகர் குறுக்கு தெரு | 10 | – |
| 8 | SVN தோட்டம் செல்லும் சாலை | 3 | – |
| 9 | குருலிங்காபுரம் விரிவாகக்க பகுதி | 14 | 314 |
| 10 | ஆண்டாள்புரம் | 3 | 60 |
| 11 | நடராஜா தியேட்டர் ரோடு | 4 | 50 |
| 12 | வெங்கடேஸ்வர பள்ளி ரோடு | 25 | 541 |
| | **மொத்தம்** | **84** | **1225** |

| | | | |
|---|---|---|---|
| | **பகுதி–2** | | |
| 1 | நியூ காலனி | 4 | – |
| 2 | சுமங்கலி மண்டபம் குறுக்கு தெரு | 1 | – |
| 3 | பழைய டிரங்க் ரோடு | 2 | . |
| 4 | கீழக்காந்தி நகர் | 1 | – |
| 5 | மதுரா கோர்ட்ஸ் குறுக்கு தெரு | 1 | . |
| 6 | சாத்தூர் – சிவகாசி ரோடு | 85 | 1860 |
| 7 | KAP காம்ப்ளக்ஸ் தெரு | 2 | 60 |
| 8 | அன்பு காம்ப்ளக்ஸ் தெரு | 3 | 90 |
| 9 | கீழக்காந்தி நகர் | 6 | 150 |
| | **மொத்தம்** | **105** | **2160** |
| | **பகுதி–3** | | |
| 1 | செல்லியாரம்மன் கோவில் தெரு | 22 | 480 |
| | **மொத்தம்** | **22** | **480** |
| | **பெரு மொத்தம்** | **211** | **3865** |

அட்டவணையில் கண்டுள்ள பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய திட்ட மதிப்பீட்டிற்கு மிகாமலும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளபடி நகரின் அனைத்து பகுதிகளிலும் எந்த ஒரு பகுதியிலும் விடுதலுமின்றி கழிவுநீர் குழாய்கள் மற்றும் மேன்ஹோல்கள் அமைத்து திட்டத்தினை 100% முழுமை பெறுவதற்கு எந்த ஒரு பாதிப்பும் ஏற்படாத வண்ணம் திட்ட மதிப்பீட்டில் வழிவகை செய்துள்ளபடி பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2053/2006/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 790, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : மதிப்பீட்டில் வழிவகை செய்துள்ளபடி பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 2</u>

சாத்தூர் நகராட்சியினால் புதிய அலுவலக கட்டிடத்தில் கூடுதல் வசதிகள் செய்யும் பொருட்டு மின்இணைப்பு பணிகள், கணினி இன்டர்நெட் இணைப்புகள் மற்றும் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்ளுவதற்கு 26.05.2021–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.கண்ணன் – மதிப்பீட்டை விட 0.27% அதிகம்
   M/s. TPK and CO
2. திரு.எஸ்.சேசப்பன் – மதிப்பீட்டை விட 0.05% குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.சேசப்பன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.372/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 791, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 3</u>

சாத்தூர் நகராட்சியினால் புதிய அலுவலக கட்டிடத்தில் அருகில் உள்ள சமுதாய கூடத்தில் பொது சுகாதார பிரிவிக்கு துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வாளர், துப்புரவு மேற்பார்வையாளர், தூய்மை பணியாளர்கள் மற்றும் தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கான பொருட்கள் குடிநீர் பிரிவில் உள்ள சாமான்களை இருப்பு வைப்பதற்கு அறைகள் தயார் செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளுவதற்கு 26.05.2021–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

1. திரு.எம்.கண்ணன் – மதிப்பீட்டை விட 0.04% அதிகம்
   M/s. TPK and CO

2. திரு.எஸ்.சேசப்பன் – மதிப்பீட்டை விட 0.01% குறைவு

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எஸ்.சேசப்பன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.373/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 792, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 4</u>

சாத்தூர் நகராட்சி தெருவிளக்கு பராமரிப்புக்கு 2021–2022–ம் ஆண்டிற்கு தேவையான மின்பொருட்களை ரூ.6.00 இலட்சத்திற்கு வாங்க மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.439/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 793, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 5</u>

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள ஜெட்ராய்டு வாகனம் TN 67 BJ 4441 வண்டிக்கு தகுதி சான்று 24.07.2021–ல் முடிவு பெறுவதால் மேற்கண்ட வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பொருட்டு கீழ்க்கண்டுள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.16,500/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாகனம் வாட்டர் சர்வீஸ் செய்ய வேண்டும்
2. 4 வீல் கிரீஸ் பேக்கிங் செய்ய வேண்டும்
3. பிரேக் செக்கப் செய்ய வேண்டும்
4. வாகனம் உள்பகுதி வெளிபகுதி பெயிண்ட் செய்து அரசு பிறப்பிக்கப்பட்ட எழுத்துக்கள் எழுத வேண்டும்.

(ந.க.எண்.392/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 794, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 6</u>

சாத்தூர் நகராட்சி பொறியியல் பிரிவில் உள்ள மினிடாங்கர் லாரி வாகனம் TN 67B 7759 வண்டிக்கு தகுதி சான்று 31.07.2021–ல் முடிவு பெறுவதால் மேற்கண்ட வாகனத்திற்கு தகுதி சான்று புதுப்பிக்கும் பொருட்டு கீழ்க்கண்டுள்ள பழுது மற்றும் பராமரிப்பு பணிகளை அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான மதுரை டிவிஎஸ் மூலம் பணிகளை மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.68,000/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

1. வாகனம் வாட்டர் சர்வீஸ் இன்ஜீன் ஆயில், டீசல் பில்டர், ஆயில் பில்டர் மாற்ற வேண்டும்
2. கியர் ஆயில், கோரன் ஆயில், ஸ்டேரிங் ஆயில் டாப்ஆப் செய்ய வேண்டும்
3. 1/3/4 ஒஸ், 1.5 எம் வயர் 100 அடி, 1/3/4 கேட்வால் புதியது மாட்ட வேண்டும்
4. கியர் ராடு பழுது பார்க்க வேண்டும்
5. கேபிள் புஸ், பிளக்ஸ், பிரேக் லையனிங், டிங்கர் ஒர்க், எலக்ட்ரிக்ல் ஒர்க் பழுது பார்க்க வேண்டும்.
6. நான்கு வீல் கிரீஸ் பேக்கிங் செல்ப் மோட்டார், டையனமோ மோட்டார் பழுது பார்க்க வேண்டும்.
7. பெயிண்ட் செய்து அரசு பிறப்பிக்கப்பட்ட எழுத்துக்கள் எழுத வேண்டும்.

(ந.க.எண்.440/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 795, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 7</u>

சாத்தூர் நகராட்சி இருக்குண்குடி நீர்உந்து நிலையத்தில் உள்ள 12 எச்.பி மோட்டார் பழுது பார்க்கும் பணிகளை மேற்கொள்ளுவதற்கு 18.06.2021–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ், சாத்தூர் | – | ரூ.30,680/– |
| 2. | மகேஸ்வரி எலக்ட்ரிக்ல்ஸ், சாத்தூர் | – | ரூ. 33,150/– |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கெங்கா எலக்ட்ரிக்ல்ஸ், சாத்தூர் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.17/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 796, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 8</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு 7–ல் ஆண்டாள்புரம் தெற்கு பகுதியில் புதிதாக 30 மீ நீளத்திற்கு பைப் லையன் அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.25,000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.410/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 797, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 9</u>

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட வார்டு 24–ல் சந்தன மாரியம்மன் மேற்கு பகுதியில் புதிதாக 20 மீ நீளத்திற்கு பைப் லையன் அமைக்கும் பணியினை மேற்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.21,000/– க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

(ந.க.எண்.409/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 798, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 10</u>

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு, தூய்மைப் பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் தளவாடச் சாமான்கள் 2021–2022ம் ஆண்டிற்கு வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு. மேலும் அரசு அங்கீகாரம் பெற்றுள்ள கூட்டுறவு நிறுவனம் அல்லது கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சேவை நிறுவனம் மூலம் வாங்கிக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 799, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 11</u>

உலகம் முழுவதும் வைரலாக பரவி வரும் இரண்டாம் அலை கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொதுமக்கள் தற்காத்து கொள்வதற்கான விழிப்புணர்வு உலகங்கள் அடங்கிய பிளக்ஸ் பேனர்கள் 40 எண்ணம், மக்கள் அதிகம் கூடும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு அறிவிப்பு நோட்டீஸ் 5000 எண்ணம் அச்சிட்டு பொதுமக்களுக்கு வழங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.1.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**நகர்மன்றத் தீர்மானம் எண். 800, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : அனுமதிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 12</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–22 ஆண்டுக்கு குடிநீர் விநியோகப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 20.05.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு. பி.சுப்பாராஜ் மதிப்பீட்டை விட – **0.23** சதவீதம் குறைவு
2. திரு. எம்.முத்துராமலிங்கம் மதிப்பீட்டை விட – **0.28** சதவீதம் அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.பி.சுப்பாராஜ் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 208/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 801, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

<u>பொருள் எண்: 13</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–22 ஆண்டுக்கு அடிபம்பு மற்றும் விசைப் பம்புகளைப் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 20.05.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு.எம்.முத்துராமலிங்கம் மதிப்பீட்டை விட – **0.05** சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் மதிப்பீட்டை விட – **0.12** சதவீதம் அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 207/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 802, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**
<u>பொருள் எண்: 14</u>

சாத்தூர் நகராட்சியில் 2021–22 ஆண்டுக்கு பாதாளச் சாக்கடை பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 20.05.2021–ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>**

1. திரு.எம்.முத்துராமலிங்கம் மதிப்பீட்டை விட – **0.10** சதவீதம் குறைவு
2. திரு.பி.சுப்பாராஜ் மதிப்பீட்டை விட – **0.86** சதவீதம் அதிகம்

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.முத்துராமலிங்கம் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 209/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 803, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

பொருள் எண்: 15

சாத்தூர் நகராட்சி பகுதிக்குட்பட்ட பொது கழிப்பறைகளை சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் 31.05.2021 அன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் 7 பொது கழிப்பறைகளில் உள்ள சிறு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணிகளை உடன் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தலுக்கு இணங்க மேற்கண்ட பணியினை அவசர அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்ட விதி 15–ன் கீழ் ரூ.62000/–க்கு மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளுவதற்கு நகராட்சி பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைப்புள்ளிகள் 09.06.2021–ல் கோரப்பட்டதில் இரண்டு விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. பெறப்பட்ட விலைப்புள்ளிக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பபட்டது மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**விலைப்புள்ளி விபரம்**

1. திரு.எஸ்.சேசப்பன் மதிப்பீட்டை விட – 0.7 சதவீதம் குறைவு
2. M/s TPK and CO – 1.8 சதவீதம் அதிகம்

(ந.க.எண். 434/2021/எம்1)
**நகர்மன்றத் தீர்மானம் எண். 804, நாள்: 20.07.2021.**
**தீர்மானம் : குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்படுகிறது.**

**(ஒம்) என்.ராஜமாணிக்கம்,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**
**சாத்தூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்**
**சாத்தூர் நகராட்சி.**